1. ஸாதகன் தனது நாபியில் வெண் தாமரையையும் அதன் மேல் சூரிய மண்டலத்தையும், அதன் நடுவில் த்ரிகோணத்தில், இச்சை ஞானம் கிரியை என்னும் மூன்று சக்திகளைத் தாங்கியவளும், ஸம்ஸாரத்தின் ஸாரமானவளும் மூன்று உலகங்களைப் படைத்தவளும் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றையும் அளிப்பவளும், அழிவிலிருந்து காப்பாற்றுபவளும், யோக முத்ரா ரூபிணியும் ஆகிய சின்னமஸ்ததா என்னும் யோகினியை வணங்குகிறான்.

2. ஸாதகன் தன் நாபியில் வெண் தாமரை போன்ற முகமும், செம்பருத்தி போன்ற செந்நிறமும் விளங்கும் சூரிய மண்டலமும், அதன் நடுவில் உயர்ந்த யோனி சக்ரத்தையும் அதன் நடுவில் ரதி மன்மதர்கள் மேலும் கீழுமாக உபரிசுரதத்தில் இருக்கும் பீடத்தில் விளங்குபவளும் கோடி இளம் சூரியர்களைப்போன்ற ஒளி படைத்த மங்கள ரூபிணியாகிய ப்ரசண்ட சண்டிகையைத் தியானிக்கிறான்.

3. இடது கையில் வெட்டிய தனது தலையைத் தாங்கியவளும், மற்றொரு கையில் பெரிய கத்தரியை உடையவளும் ப்ரத்யாலீடம் என்னும் நிலையில் நிற்பவளும் ஆடை அற்றவளும் அவிழ்ந்த கூந்தலை உடையவளும், வெட்டிய தனது தலையிலிருந்து வெளிப்படும் குருதியைக் குடிப்பவளும், இளம் சூரியனைப் போன்ற ஒளி படைத்தவளும் மூன்று கண்களை உடையவளுமம் ஆகிய உயர்ந்த சின்னமஸ்த்தா தேவியை வணங்குகிறேன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

4. வலது பக்கத்தில், பீறிட்டு எழும் குருதியை ஆனந்தமாகப் பாடிக் கொண்டே குடிப்பவளும், எலும்பை அணிந்தவளும், கொடிய உருவத்தை உடையவளும் சிவந்த கூந்தலை உடையவளும், ஆடையற்றவளும் ப்ரத்யாலீடம் என்னும் நிலையில் நிற்பவளும் சிவந்த உடலை உடையவளும், யோனி முத்ரையைத் தாங்கியவளும் சின்னமஸ்த்தா தேவியின் சக்தியுமாகிய வர்ணினி என்னும் யோகினியைத் தியானிக்கிறேன்.

5. ஆடையற்றவளும் அவிழ்ந்த கூந்தலை உடையவளும், ஊழிக் காலத்துக் கருமேகம் போலக் கொடிய உருவம் படைத்தவளும். கோரைப்பல் கூடிய, காண முடியாத வாயில் தொங்குகின்ற நாக்கை உடையவளும், மின்னல் போல விளங்கும் குண்டலினீ சக்தி ஆனவளும், அப்பொழுது வெட்டிய கழுத்திலிருந்து பெருகும் குருதியைக் குடிப்பவளும் சின்னமஸ்த்தாதேவியின் சக்தி ஆனவளும் ஆகிய டாகினியை வணங்குகிறேன்.

6. பிரமன், ஈசானன், திருமால் முதலியவர்களைத் தமது தலையில் சூடும் திருவடிகளையுடைய யோகீந்திரர்களால் இடைவிடாது சிந்திக்கப்படுபவளும் சம்சாரத்தின் சாரமானவளும், மூவுலகிற்கும் தாயானவளும், பெருமை மிக்கவளும், விரும்பியவற்றை அளிப்பவளும், கலியின் வெம்மையைப் போக்குபவளும் ஆகிய சின்னமஸ்த்தா தேவியை வணங்குகிறேன்.

7. தோற்றம், நிலைபேறு, அழிவு என்னும் மூன்றையும் செய்யும் தொழிலுக்குத் தகுந்தபடி மூன்று குணங்களாலாகிய தேகங்களை, பிரமன், திருமால் சிவன் யாருடைய ப்ரக்ருதியிலிருந்து பெறுகிறார்களோ, யாருடைய திருவடித் தாமரையில் வணங்கி தேவர்கள் பேறுகள் பெறுகிறார்களோ, அப்படிப்பட்ட

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சின்னமஸ்த்தா தேவியை, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் அடைவதன் பொருட்டுச் சிந்திக்கிறேன்.

8. இத்தகைய பெருமை வாய்ந்த சின்னமஸ்த்தா தேவியை உபாஸிக்கும் நான் விரும்பிய பெண்ணுடன் யோகத்தில் இணையும் வழிபாட்டில் ஈடுபட்டிருக்கிறேன். பலவகைப்பட்ட குலமார்க்கத்தின் கிரியைகளால் பெருமை பெற்றுள்ளேன். பசு ஜனங்களின் பால் நாட்டம் கொள்ளாமல் இருக்கிறேன். ஆனந்த பைரவியைச் சார்ந்துள்ளேன், குருவின் திருவடியே புகலாகக் கொண்டவனைப் பைரவ ரூபமாகிய சிவமே நான் என்னும் உணர்வுடன் இருக்கிறேன்.

9. பிரம்மாவால் கூறப்பட்ட பெருமை வாய்ந்த இந்தத்துதி எல்லா சித்திகளையும் அளிக்க வல்லது. பெரும் பாதகங்களை அழிப்பது.

10. எவன் வைகறையில் எழுந்து தேவியின் திருமுன் இதைப் படிக்கிருனே அவன் எண்ணிய எண்ணம் நிறைவேறும்.

11. செல்வம், தானியம், பிள்ளைப் பேறு, சிறந்த மனைவி, குதிரை, யானை, பூமி பெருங்கல்வி, எட்டு ஸித்திகள் ஆகிய யாவும் பெறுவது திண்ணம்.

12. மஹாமாயையே! புலித்தோல் அழகுடன் அணி செய்யும் அல்குலை உடையவளே! தொங்கும் வயிற்றை உடையவளே! குறிய வடிவினளே! இன்னதென்று கூற இயலாத எல்லா வகையான பேறுகளாக இருப்பவளே! முண்டமாலை அணிந்தவளே, கத்திரியைத் தாங்கியவளே, வெண்மல்லிகையைப் போன்ற நிறம் படைத்தவளே, ஸாதகர்கள் பால் கருணை கூடியவளே! தாயே! உனக்கு வணக்கம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திரிபுரபைரவி ஸ்தோத்ரம்

1. பிரம்மா முதலிய தேவர்கள் பலநூறு துதிகளாலும் யாருடைய சூக்ஷ்ம ரூபத்தை அறிய முடிய வில்லையோ, யார் இந்த உலகத்திற்குக் காரணமோ தனக்கு வேறொரு காரணம் இல்லாதவளோ, கொங்கைகளின் சுமையால் சிறிது வளைந்தவளோ, புதிய குங்குமப்பூப் போன்ற நிறம் படைத்தவளோ, எல்லாவிதமான சொற்களுக்கும் பிறப்பிடம் ஆன வளோ, அத்தகைய த்ரிபுரபைரவியை நாங்கள் துதிக்கிறோம்.

2. திரிபுரபைரவியே! அப்பொழுது உதித்த ஆயிரம் சூரியர்களைப் போன்ற ஒளி படைத்தவளும், சின்முத்திரை, அக்ஷமாலை, வரதம், அபயம் என்னும் இவற்றைத் தாங்கிய கரங்களை உடையவளும், நக்ஷத்ரமாலை போல்'ஒளி படைத்தவளுமகிய உன்னை நாங்கள் ஸேவிக்கிறோம்.

3. சிந்தூர வெள்ளம் போன்று ஒளி படைத்த வளும், கொங்கைச் சுமையால் சிறிது வளைந்தவளும், பல பிறவிகளில் செய்த புண்ணியங்களின் பயனால் அடையத் தகுந்தவளும், ஒருவருக்கொருவர் வேற்றுமை ஏற்படுத்தி அதனால் சச்சரவுகளில் ஈடுபட்டு மனங்கலங்கிய அறிவிலிகள், தாயே! உன்னை எவ்வாறு அறிவார்கள்?

4. முனிவர்கள் உன்னை ஸ்தூலரூபமானவள் என்றும், வேதங்கள் ஸூக்ஷ்மமானவள் என்றும், வேறு சிலர் சொற்களின் இருப்பிடமானவள் என்றும், இன்னொரு சாரார் எல்லாவற்றிற்கும் மூலமானவள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

என்றும் கூறுகின்றனர். ஆனால் நாங்களோ பவானியே! உன்னை எல்லையற்ற அருட்கடலாகக் கருதுகின்றோம்.

5. தாயே! பிறைச் சந்திரனைச் சூடியவளும் சரத்கால சந்திரனைப் போல் வெண்ணிறம் படைத்த வளும் ஐம்பது மாத்ருகா அட்சரமயமாக இருப்பவளும் இதயத்தில் பாவனையை ஏற்படுத்துபவளும், புஸ்தகம் ஜபமாலை, அமுதகலசம், சின்முத்திரை என்னும் நான்கையும் கைகளாகிய தாமரைகளில் தாங்கு பவளும், மூன்று கண்களை உடையவளுமாக ஸாதகர்கள் உன்னைத் தியானிக்கிறார்கள்.

6. த்ரிபுரையே! மலைமகளை ஒரு பாதியில் உடைய சிவனும் நீ, திருமகளை அணைந்திருக்கும் திருமாலும் நீ, நாமகளின் இருப்பிடமாகிய பிரம்ம தேவனும் நீயே, அம்மூவரும் செய்யும் தொழில் களாகிய அழித்தல், காத்தல், ஆக்கல் என்னும் மூன் றும் நீயே!

7. வாக்பவ பீஜத்தைச் சார்ந்து பரை, பச்யந்தி மத்யமை, வைகரீ என்னும் நான்கு நிலைகளை யும் சொற்களில் பொருத்தி, தொண்டை முதலிய கரணங்களால் அவற்றை வெளிப்படுத்துபவளும், நிர்விகல்ப ஞானமாக இருப்பவளும் ஆகிய பரதேவ தையாம் உன்னை நான் என் இதயத்தில் ஒரு பொழு தும் மறவேன்.

8. பிராணவாயுவைச் சுருக்கிக் காமம் முதலிய ஆறு பகைவர்களை வென்று அசையாத உள்ளத் துடன் மூக்கு நுனியைப் பார்த்துக் கொண்டு, சாதகங் கள், பிறைமதி சூடியவளும் இளஞ்சூரியனைப் போன்ற உருவத்தை உடையவளும் ஆகிய உன்னைத் தமது உச்சியில் சிந்திக்கிறார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

9. மன்மதனுடைய பகைவனுகிய சிவபெருமானின் உடலில் பாதியை அடைந்து இந்த உலகங்களை நீ படைக்கிருய் என்று வேதம் கூறுகிறது, அது உண்மைதான். பார்வதியே! அனைத்து உலகிற்கும் தாயே! அங்ஙனம் இல்லாவிடில் இந்த உலகம் முழுமைக்கும் இருப்பு என்பதே போய் விடும்.

10. மதுவை உட்கொண்டு அதனுல் கண்கள் சிவந்த சித்தரென்னும் தேவ கூட்டத்தைச் சார்ந்த இளம் பெண்கள் கின்னரப் பெண்களுடன் மேரு மலையின் உள் பாகங்களில் பீடத்தைச் சமைத்துத் தேவ லோகத்து மரங்களின் மலர்களால் உனக்கு பூஜை செய்து இனிமையாகப் பாடுகிருர்கள்.

11. மின்னல் போல விளங்கும் அழகிய உடலின் சோபையை வெளிப்படுத்தித் தனது இருப்பிடமாகிய மூலாதாரத்திலிருந்து பரசிவம் இருக்கும் பிரம்மரந்திரத்தை அடைந்து ஸுஷும்நா நாடியில் இருக்கும் தாமரைகளை மலர்த்துபவளும். உயர்ந்த அமுதத்தால் நனைந்த உடலையுடையவளும் ஆகிய திரிபுர பைரவியை நான் எனது நெஞ்சத்தில் வழிபடுகிறேன்.

12. திரிபுரையே! ஆனந்தத்தின் இருப்பிடமும் வேதங்களின் பிறப்பிடமும் சைதன்ய மயமும் ஆகியவளும், பிரம்மா, ஈசன், விஷ்ணு இவர்களால் உபாசிக்கப் பெற்ற திருவடித் தாமரையை உடையவளும், எல்லாப் பேறுகளின் பிறப்பிடம் ஆனவளும் ஆகிய உன்னை நான் முறைப்படி புகலடைகிறேன்.

13. சப்தப்பிரபஞ்சம் அர்த்தப் பிரபஞ்சம் என்னும் இரு கூறுகள் உடைய இவ்வுலகத்தை சந்திரரூபமாக இருந்து படைப்பவளும் சூரிய ரூபமாக இருந்து தனது சக்தியால் அதைக் காப்பவளும் ஊழிக் காலத்தில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நெருப்பாக இருந்து அதனை அழிப்பவளும் ஆகிய சாரதா தேவியாகிய த்ரிபுரையை நான் என் மனத்தில் ஒரு பொழுதும் மறவேன்.

14. மலைமகளே! உன்னை நாராயணி, நரகக் கடலைக் கடக்கச் செய்யும் தோணி, கௌரி, துன்பத்தைப் போக்குபவள், ஸரஸ்வதி, ஞானத்தை அளிப்பவள், முக்கண்ணனின் அணிகலன் என்று பல படித்தாகக் கூறுவர்.

15. இவ்வுலகத் தாயே! இந்தப் பன்னிரண்டு சுலோகங்களை முறையாகக் கூறி எவர் உன்னைத் துதிக்கிறார்களோ அவர்கள் வாக்கு வன்மை பெருஞ் செல்வம் இவற்றை அடைந்து இறுதியில் உன்னை வந்து அடைகிறார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தூமாவதீ ஸ்தோத்ரம்

1. காலையில் குமாரி வடிவில் பூ மொட்டுக்களால் ஆன ஜபமாலையில் ஜபிப்பவளும் நண்பகலில் நடுத்தர வயதுப் பெண்ணாக மலர்ந்தமுகமும் அழகிய கண்ணும் உடையவளும், மாலையிலும் இரவிலும் வயதான தோற்றத்துடன் உறுதி குறைந்த முலைகளை உடையவளும், முண்டமாலை தரித்தவளும், தேவர்களுக்கெல்லாம் தலைவியும், மூன்று உலகங்களைப் படைத்தவளும் கருநிறம் உடையவளும் ஆகிய தூமாவதி தேவி உங்களைக் காப்பாற்றட்டும்.

2. பிரம்மாவின் பழுப்பு நிறமுடைய சிறந்த சடைமுடியைத் தனது குண்டாந்தடியின் நுனியில் கட்டி அசுரர்களின் தலைகளைக் கொண்டு மார்பில் மாலை புனைந்து, கருடனின் சிறகுகளால் ஆகிய மகுடத்தை அணிந்து, தேவர்களின் குருதி நிரம்பிய, எமனின் வாகனமாகிய எருமையின் கொம்பைக் கையில் ஏந்தியுள்ள பைரவர், ஊழிக்கால இரவில், பிரளயமே வணங்குவதால் மகிழும் தூமாவதீ தேவியுடன் கூடி உங்களைக் காப்பாற்றட்டும்.

3. வெளிப்படையாக "கட கட'' என ஒலி எழ எலும்புத்துண்டுகளை மெல்லுபவளும் 'கஹகஹ', எனப் பிணங்களின் நடுவில் நின்று நகைப்பவளும், வற்றிய உடலுடன் வாயால் 'டிம்டிம்' என டமருகம் போல் ஒலி எழுப்புவளும் ஜம ஜம என பேசிக் கொண்டே அலைகின்றவளுமாகிய சண்டிகை நம்மைக் காக்கட்டும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

4. 'டண் டண்' என ஒலி எழும்பும் மணியைத் தாங்குபவளும், 'டகடக' என பயங்கரமாகச் சிரிப்பவளும் தொங்குகின்ற பயங்கரமான முண்டமாலை தரித்தவளும், நஞ்சுபோல அலை அலையாகக் கிளம்பும் சொற்களை உடையவளும், சண்டன் முண்டன் என்னும் இருவரை வாயால் மென்று அழிப்பவளுமாகிய தேவி நம்மைக் காக்கட்டும்.

5. ஊழிக்காலத்தில் இடது காதில் சந்திரனும் வலது காதில் சூரியனும் கழுத்தில் நட்சத்திரமாலையும் மறைந்தொழிய, சிறந்த விரிந்த சடைமுடியில் முண்டமாலையும் தோளில் வாசுகி ஆதிசேடன் முதலிய நாகங்களின் தலைகளும் கொண்டு அங்கு பிரம்மாவின் எலும்பு மாலையும் தாங்குபவளும் மங்களங்களை அருளுபவளும் ஆகிய பத்திரகாளி எனது அச்சத்தை நீக்கட்டும்.

6. எண்ணெய் நிரம்பப் பூசிய பெரிய சடை உடையவளும் ஈயத்தாலாகிய வளையம் அணிந்த காதை உடையவளும், திருவடியில் உலோகத்தால் ஆகிய கழலை அணிந்தவளும், ஆடையற்றவளும், வயதானவளு,ம் தலைகளால் ஆகிய மாலையை அணிந்த தோளை உடையவளும், தனது வாகனமாகிய கழுதையைக் கொண்டு இவ்வுலகத்தை விழுங்குபவளும் ஆகிய தேவி நீயன்றோ!

7. போர்க்களத்தில் ஆயுதங்களால் வெட்டப்பட்டுக் குருதி வழியும் பற்களையுடைய வீரர்களின் தலைகளை மாலையாக சிரத்தில் இறுக்கி முண்டங்கள் தவழும் தோளுடன் நீ சுடுகாட்டில் நுழைகிறாய். அங்கே இரவில் நீ உனது பெரிய அல்குலைச் சுற்றிப் பாம்புகளாலாகிய மேகலையை அணிந்திருக்கிறாய். திரிசூலம் ஏந்திய கையும், மது, குருதி இவற்றைக் குடிப்பதால் எப்பொழுதும் சிவந்த கண்ணுமாக நீ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தூமாவதீ ஸ்தோத்ரம்

1. காலையில் குமாரி வடிவில் பூ மொட்டுக்களால் ஆன ஜபமாலையில் ஜபிப்பவளும் நண்பகலில் நடுத்தர வயதுப் பெண்ணாக மலர்ந்தமுகமும் அழகிய கண்ணும் உடையவளும், மாலையிலும் இரவிலும் வயதான தோற்றத்துடன் உறுதி குறைந்த முலைகளை உடையவளும், முண்டமாலை தரித்தவளும், தேவர்களுக்கெல்லாம் தலைவியும், மூன்று உலகங்களைப் படைத்தவளும் கருநிறம் உடையவளும் ஆகிய தூமாவதி தேவி உங்களைக் காப்பாற்றட்டும்.

2. பிரம்மாவின் பழுப்பு நிறமுடைய சிறந்த சடைமுடியைத் தனது குண்டாந்தடியின் நுனியில் கட்டி அசுரர்களின் தலைகளைக் கொண்டு மார்பில் மாலை புனைந்து, கருடனின் சிறகுகளால் ஆகிய மகுடத்தை அணிந்து, தேவர்களின் குருதி நிரம்பிய, எமனின் வாகனமாகிய எருமையின் கொம்பைக் கையில் ஏந்தியுள்ள பைரவர், ஊழிக்கால இரவில், பிரளயமே வணங்குவதால் மகிழும் தூமாவதீ தேவியுடன் கூடி உங்களைக் காப்பாற்றட்டும்.

3. வெளிப்படையாக "கட கட" என ஒலி எழ எலும்புத்துண்டுகளை மெல்லுபவளும் 'கஹகஹ', எனப் பிணங்களின் நடுவில் நின்று நகைப்பவளும், வற்றிய உடலுடன் வாயால் 'டிம்டிம்' என டமருகம் போல் ஒலி எழுப்புவளும் ஜம ஜம என பேசிக் கொண்டே அலைகின்றவளுமாகிய சண்டிகை நம்மைக் காக்கட்டும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

4. 'டண் டண்' என ஒலி எழும்பும் மணியைத் தாங்குபவளும், 'டகடக' என பயங்கரமாகச் சிரிப்பவளும் தொங்குகின்ற பயங்கரமான முண்டமாலை தரித்தவளும், நஞ்சுபோல அலை அலையாகக் கிளம்பும் சொற்களை உடையவளும், சண்டன் முண்டன் என்னும் இருவரை வாயால் மென்று அழிப்பவளுமாகிய தேவி நம்மைக் காக்கட்டும்.

5. ஊழிக்காலத்தில் இடது காதில் சந்திரனும் வலது காதில் சூரியனும் கழுத்தில் நட்சத்திரமாலையும் மறைந்தொழிய, சிறந்த விரிந்த சடைமுடியில் முண்டமாலையும் தோளில் வாசுகி ஆதிசேடன் முதலிய நாகங்களின் தலைகளும் கொண்டு அங்கு பிரம்மாவின் எலும்பு மாலையும் தாங்குபவளும் மங்களங்களை அருளுபவளும் ஆகிய பத்திரகாளி எனது அச்சத்தை நீக்கட்டும்.

6. எண்ணெய் நிரம்பப் பூசிய பெரிய சடை உடையவளும் ஈயத்தாலாகிய வளையம் அணிந்த காதை உடையவளும், திருவடியில் உலோகத்தால் ஆகிய கழலை அணிந்தவளும், ஆடையற்றவளும், வயதானவளும், தலைகளால் ஆகிய மாலையை அணிந்த தோளை உடையவளும், தனது வாகனமாகிய கழுதையைக் கொண்டு இவ்வுலகத்தை விழுங்குபவளும் ஆகிய தேவி நீயன்றோ!

7. போர்க்களத்தில் ஆயுதங்களால் வெட்டப்பட்டுக் குருதி வழியும் பற்களையுடைய வீரர்களின் தலைகளை மாலையாக சிரத்தில் இறுக்கி முண்டங்கள் தவழும் தோளுடன் நீ சுடுகாட்டில் நுழைகிறாய். அங்கே இரவில் நீ உனது பெரிய அல்குலைச் சுற்றிப் பாம்புகளாலாகிய மேகலையை அணிந்திருக்கிறாய். திரிசூலம் ஏந்திய கையும், மது, குருதி இவற்றைக் குடிப்பதால் எப்பொழுதும் சிவந்த கண்ணுமாக நீ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நிறைய பூதகணங்களால் அச்சத்துடன் பார்க்கப் படுகிருய்.

8. இவ்வுலகம் முடிகின்ற தறுவாயில் மனிதர் களின் குருதியும் நிணமும் பொங்குவதும் புகை எழும்புவதால் இருண்டிருப்பதும், கோரைப் பற்களால் பயங்கரமாக உள்ளதுமாகிய உனது வாயில் இவ்வுலகம் முழுமையும் அரை நொடியில் நுழைகிறது நீ கபால மாலே பூண்டவள்! சவத்தில் அமர்ந் திருப்பவள்! யோக முத்திரையுடன் கூடிய யோகினி நீ! செந்நிறம் படைத்தவள்! வளமையானவள்! உரத்து ஒலியெழுப்பும் மணியைத் தாங்கியவள்! சிவையாகிய நீ மரண பயத்தைப் போக்குகிறாய்.

9. எல்லா ஆபத்துக்களேயும் போக்குவதும் புண்ணியமானதுமாகிய இந்தத் தூமாவதீ அஷ்ட கத்தைப் பக்தியுடன் படிக்கும் ஸாதகன் தான் எண்ணியதை அடைவான்.

10. மிகவும் கோரமான ஆபத்து, பெரியநோய், பெரும்போர், பகைவர்கள் ஆகியவற்றை விரட்டுதல், மாரணம்,மோஹனம் என்னும சித்திகள்.

11. இந்தத் துதியைப் படிக்கின்றவர்களுக்கு ஸித்தி ஆகின்றன. தேவர்கள், அசுரர்கள், கந்தர் வர்கள், யக்ஷர்கள், அரக்கர்கள், நாகர்கள்.

12, சிங்கம் புலி முதலிய கொடிய விலங்குகள் ஆகிய யாவும இந்தத் தோத்திரத்தை நினைவு கூர்வ தால் மிகத் தொலேவில் ஓடி விடுகின்றன. அப்படி இருக்க மனிதர்களேப் பற்றிச் சொல்ல என்ன உள்ளது?

13. இந்தத் தோத்திரத்தைப் படிப்பதால் நிறை வேறாதது ஒன்றுமில்லே. எல்லாத் துன்பங்களும் நீங்கும். ஸாதகன் இறுதியில் முக்தியை அடைகிருன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பகளாமுகீ ஸ்தோத்ரம்

1. அமுதக் கடலின் நடுவில் இருக்கும மணி மண்டபத்தின் ரத்தின மேடையில் 'சிம்மாசனத்தின் மேல் இருப்பவளும். மிகுந்த மஞ்சள் நிறத்தை உடையவளும், மஞ்சள் நிறத்தை உடைய ஆடை அணிகலன் மாலை இவற்ருல் அழகு செய்யப் பெற்ற அங்கங்களையுடையவளும் ஒரு கையில் கதையும் மறு கையில் எதிரியின் நாக்கும் பற்றியிருப்பவளுமாகிய பகளாமுகி தேவியை நான் நினைக்கிறேன.

2. எதிரிகளின் நாக்கை இடது கரத்தால் பற்றி வலது கரத்தால் கதாயுதம் கொண்டு அவர்களை அடித்து வீழ்த்துபவளும், மஞ்சள் நிற ஆடை அணிந்திருப்பவளும் இரண்டு திருக்கைகளையுடைய வளும் ஆகிய பகளாமுகியை வணங்குகிறேன்.

3. அசைகின்ற பொன் குண்டலங்கள் ஒளிரும் அழகிய கன்னங்களை உடையவளும், ஒளிமிக்க பொன் செண்பகம் இவற்றைப் போன்ற ஒளி படைத்தவளும் முழுமதி போன்ற முகமுடையவளும், கதாயுதத்தால் எதிரிகளை அடித்து வீழ்த்துபவளும் அசையும் நாக்கு நுனியை உடையவளும் எதிரிகளின் வாக்கைத் தடை செய்கின்றவளும் ஆகிய பகளாமுகியை நினைக் கிறேன்.

4. அமுதக் கடலின் அழகாக விளங்கும் செங் குவளைமலர் போன்ற மண்டபத்தில் சிம்மாசனத்தின் மேல் அமர்ந்திருப்பவளும், அழிக்கப் பெற்ற எதிரி களின் பிணங்களிலமர்ந்து இருப்பவளும் பொன்னிற மானவளும் எதிரியின் நாக்கைக் கையால் பற்றி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பவளும் கதையைச் சுழற்றுபவளும் ஆகு பகளாமுகியை எவன் தியானிக்கிருனே அவனது எல்லா ஆபத்துக்களும் உடனே மறைகின்றன.

5. தேவியே! உனது திருவடித் தாமரையில் அர்ச்சனை செய்வதன் பொருட்டு மஞ்சள் நிறப் பூக் குவியலை இடதுகரத்தில் பக்தியுடன் ஏந்தி அழகிய எழுத்துக்கள் உள்ள உனது மந்திரத்தைத் தியானம் செய்து பிறகு கும்பகத்தில் உனது ஸ்திர மாயா எனனும் பீஜத்தை உருவேற்றும் ஸாதகனின் எதிரியி னுடைய சொல் இதயம் இவற்றில் உனது திருவருளால் ஒரு கணததில் ஜடததன்மை ஏற்படு கிறது.

6. என்றும் அழியாத பகளாமுகியே, மங்கள ரூபிணியே உனது ஸ்தம்பன சக்தியால் கட்டப்படும் பொழுது வாதம் செய்பவன் ஊமையாகிருன். உலகிற்குத் தலைவனுகிய அரசன் இழிந்த நிலையில் பிச்சை எடுக்கிருன். நெருப்புக் குளிர்கிறது. சினந்த வன் அமைதியாகிருன். தீயவன் நல்லவன் ஆகிருன் வேகமாக நடக்கக் கூடியவன் நொண்டுகிருன். செருக்குக் கொண்டவன் செருக்கிழந்து குறுகிப் போகிருன். முற்றும் அறிந்தவனும் ஜடமாகிருன் தாயே! உனக்கு வணக்கம்.

7. தாயே! பகளையே! எதிரிகளை அழிப்பதற்கு மந்த்ரங்கள் தேவையில்லை. உனது தூய்மையான துதியே போதும். வாதிகளைக் கட்டுவதும் மூன்று உலகங்களை வெல்வதும் வியப்பூட்டுவதும் அழகியதும் ஆகிய உனது திருநாமம் யாருடைய வாயில் இருக்கிறதோ அவனது வாதிகள் அவையில் ஊமையாகிப் போகிருர்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

8. கொடியவர்களைக் கட்டுவதும் பெருந்தடைகளை நீக்குவதும் வறுமையை ஒழிப்பதும் அரசர்களால் ஏற்படும் அச்சத்தை அழிப்பதும் அசையும் மான் போன்ற விழிகளையுடைய மங்கையரது உள்ளத்தைக் கவர்வதும் சமநோக்கு உடையவர்க்கு வளங்களைப் பெருக்குவதும், கருணை நிறைந்த அழகும் யமனுக்கும் காலனை இருப்பதுமாகி உனது திருவுருவம் என் முன்னர்த் தோன்றட்டும்.

9. தாயே! தேவியே! எதிரியின் வாயைச் சிதை! நாக்கை ஆணியால் அறை! பேச்சைத் தடை செய்! அறிவை மழுங்கச் செய்! நடையைத் தடை செய்! ஒளிரும் உனது கதையால் எதிரிகளைப் பொடியாக்கு! மஞ்சள் நிறமான அங்கங்களை உடையவளே! பீதாம்பரம் அணிந்தவளே! அருள் நிரம்பிய கடைக் கண்களை உடையவளே! பகளையே! வணங்குகின்ற எங்களது இடையூறுகளை நீக்கு!

10. தாயே! பைரவியே! பத்ரகாளியே! விஜயையே! வாராஹியே! பகளையே! கமலையே! காமேசியே! அழகிய திருமகளே! மாதங்கியே திரிபுரையே! உயர்ந்ததற்கும், உயர்ந்தவளே! சுவர்க்கம், மோட்சம் இரண்டையும் அளிப்பவளே! அடியவனாகிய நான் உன்னை அடைக்கலம் புகுந்தேன் அருளுடன் என்னைக் காப்பாற்று.

11. பெருங்குழப்பம், கள்ளர் கூட்டம், போர் நடக்கும் வேளை, கட்டப்பட்ட நிலை, நடுக்கடல், வாதம், சினந்த அரசன், நள்ளிரவு, வச்யம், ஸ்தம்பனம், எதிரிகளை அழித்தல் ஆளரவமற்ற சூழ்நிலை முதலிய நிலைகளிலும், சூழல்களிலும் மனத்துணிவுடன் இந்தத் துதியை நின்றும் இருந்தும் மூன்று வேளையும் படிக்கின்றவன் அந்தந்தத் துன்பம் நீங்கி மங்களம் பெறுவான்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

12. பகளா தேவியின் இந்தப் புனிதமான துதியைப் படித்து அவளது யந்திரத்தைத் தோள், கை அல்லது கழுத்து என்னுமிடத்தில் அணிகிற வனுக்கு அரசர்கள், பகைவர்கள், எதிரிக் கூட்டம், மதயானைகள், பாம்புகள், சிங்கம், புலி முதலியவைகள் யாவும் மயங்கிக் கீழ்ப்படிவர். அவனுக்கு அழியாத செல்வமும் ஸித்திகளும் பெருகும்.

13. தாயே! நீயே உயர்ந்த வித்யை, மூவுலகிற் கும் தாய், தடைகளை அழிப்பவள், பெண்களைக் கவர்பவள். மூவுலகிற்கும் இன்பத்தை வளர்ப்பவள். கொடியவர்களை விரட்டுபவள். எல்லோர் உள்ளத்தை யும் மலர்த்துபவள், நாக்கை ஆணி அடித்து அறை யும் பிரம்மாஸ்திர மந்திரமாக நீயே விளங்குகிருய்.

14. இந்தத் துதியைப் படிக்கும் ஸாதகன் கல்வி, செல்வம், அழியாத வளங்கள், நீண்ட ஆயுள், மக்கள், பேரர்கள், பேரரசு, சிறப்பு, போகம், கவர்ச்சி நோயின்மை ஆகிய எல்லா இன்பங்களையும் பெறு கிருன்.

15. தாயே! எதன் பொருட்டு இந்தத் துதியானது கூறப்பட்டதோ அந்த எதிரிகளை அழித்தல் என்னும் பயனை அளிப்பாயாக.

16. மஞ்சளாடை அணிந்தவளும், இரண்டு கைகளை உடையவளும் முக்கண்ணியும் ஒளிரும் உடல் உடையவளும், கருங்கல் கதையைத் தாங்கிய வளும் ஆகிய பகளாமுகியை வணங்குகிறேன்.

17. 'பிரம்மாஸ்திரம்' என்று மூன்று உலகங் களிலும் பெயர் பெற்ற இந்தப் பகளாமுகி துதி குரு பக்தி உடைய சீடனுக்கு மட்டும் கொடுக்கப்பட வேண்டும்; மற்ற யாருக்கும் தரலாகாது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மாதங்கீ ஸ்தோத்ரம்

1. தாயே! உனது திருவடித் தாமரையை வழி பட்டுப் பிரம்மா முதலிய தேவர்கள் பெரும்புகழ் அடைந் தார்கள். முனிவர்கள் பெருஞ்சிறப்பும் வேறுசில ஸாதகர்கள் பெருஞ் செல்வமும் அடைந்தார்கள்.

2. பிறைமதி சூடிய சிவனின் மனைவியும் சந்திர கலையைத் தலையில் அணிந்தவளும் ஆறு ஆம்நாயங் களால் கூறப் பெறும் இனிய பொருளை அன்புடன் உணர்த்துபவளும் ஆகிய மாதங்கியை வணங்கு கிறேன்.

3. தேவர்கள் அஸுரர்கள் வணங்குவதால் அவர் களது கிரீடத்திலிருக்கும் மணிகளால் நீராஜனம் செய்யப் பெற்ற உனது பாதாரவிந்தத்தை எவர் பணிகிறார்களோ அவர் அரசர்களுக்குரிய பெருஞ் செல்வத்தை அடைகிறார்கள்.

4. இரண்டு திருவடிகளால் ஸாதகர்களுக்குப் பெரும் பதவியை அடைவிப்பவளும் வீணையை மீட்டுபவளும் அழகிய ஆடை கட்டிய அல்குலை உடையவளும் அருள் உள்ளம் படைத்தவளுமாகிய மாதங்கிக்குத் தர்ப்பணம் செய்கிறேன்.

5. பனைஓலைச் சுருளைக் காதணியாக உடைய வளும், மது உண்பதால், சுழலும் கண்ணாகிய தாமரையை உடையவளும், பருத்தமுலைகளையுடைய வளும், மின்னல் கொடி போன்ற ஒளி படைத்தவளும், விலையுயர்ந்த அணிகளை உடையவளும் சம்புவின் மனைவியும் ஆகிய மாதங்கியை வணங்குகிறேன்.

6. தாயே! உலகங்களுக்குத் தலைவியே, கருங் குவளை போல் அழகொளியை வெளிப்படுத்துபவளே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புதிய மயிரொழுக்கால் அறியத் தகுந்ததும், மூன்று மடிப்புகளோடு கூடியதும் ஆகிய உனது இடையை நினைக்கிறேன்.

7. கடப்பமாலை அழகு செய்யும் கேசத்தை உடையவளும், சிறிது சிவந்த கன்னக்கதுப்பை உடையவளும் ஆகிய மாதங்கி தேவியைத் தாமரை மலர்களின் ஒளிபடைத்த அவளது கடைக்கண் பார்வைகளின் ஆற்றலால் உள்ளத்தில் தியானிக்கிறேன்.

8. சங்கரனுடைய மனைவியே, கொவ்வைக் கனி போன்ற உதடும், கஸ்தூரி திலகமும் அசைந்தாடும் அழகிய கூந்தலும் நீண்ட கண்களும் புன்முறுவலும் கூடிய உனது திருமுகத்தைத் துதிக்கிறேன்.

9. வாக்குக்குத் தலைவியும், மாதங்கியும் ஆகிய தேவியை எவர் பக்தியுடன் துதிக்கிறார்களோ அவர் நாள்தோறும் பெருஞ் செல்வத்தை அடைந்து பின்னர் கைலாஸத்தில் வசிப்பர்.

10. உதிக்கும் சூரியனின் ஒளிக் கற்றையாகிய அலைகளைப்போல விளங்கும் ஆடை அணிந்தவளும், கௌரியும், மது நிரம்பிய கப்பரையை ஏந்திய கையினளும், 'ஆனந்தகந்தம்' என்னும் மூலாதாரத்தில் எழுந்தவளும் முத்துமணி மாலை அசையும் மார்பினளும், பருத்து உயர்ந்த கொங்கைகளை உடையவளும், மயங்கிய புன்முறுவலை உடையவளும், சவங்களால் ஆகிய ஆசனத்தில் அமர்ந்திருப்பவளும் ஆகிய சுமுகி தேவியை வணங்குகிறேன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கனகதாராஸ்தவம்

(கமலாத்மிகா)

1. தமாலமரத்தின் மொட்டுக்களைப் பெண் வண்டு நாடுவது போல், இன்பம் மிகுதியால் புளகம் போர்த்த திருமாலின் உடலைத் தழுவியவளும், எல்லாச் செல்வங்களையும் அளிக்கும் கடைக்கண் பார்வை உடைய மங்கள தேவதையுமாகிய திருமகள் எனக்கு எல்லா நலங்களையும் அளிக்கட்டும்.

2. முராரியாகிய திருமாலின் முகத்தில் அன்பும் வெட்கமும் கலந்த கண் பார்வைகளால் குவளை மலரை நாடும் பெண் வண்டு போல், அடிக்கடி தொடுபவளும் பாற்கடலில் பிறந்தவளும் ஆகிய திருமகள் எனக்குச் செல்வத்தைக் கொடுக்கட்டும்.

3. எல்லாப் பெரிய தேவர்களுக்கும் அவரவரது பதவியால் ஏற்படும் இன்பத்தை அளிப்பதில் திறமை படைத்ததும் திருமாலுக்கு மிகுந்த இன்பத்திற்குக் காரணமாயும் இருக்கும கருங்குவளையொத்த திருமகளின் கடைக்கண் பார்வை ஒரு கணம் என் மேல் படட்டும்.

4. இன்பத்தால் மூடிய கண்களையுடைய முகுந்தனை அடைந்து, ஆனந்தத்திற்குக்காரணமாயும் விழித்திருப்பதும் ச்ருங்காரத்தை வளர்ப்பதும் இமை மயிர் கூடியதாயும் உள்ள, ஆதிசேஷனில் படுத்திருக்கும் திருமாலின் மனைவியாகிய திருமகளின் கடைக்கண் பார்வை எனக்குச் செல்வத்தை அளிக்கட்டும்.

5. மது என்னும் அசுரனை அழித்த திருமாலின் மார்பிலுள்ள கௌஸ்துப மணிக்கு நீல காந்தியால்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆகிய மாலையாகவும், திருமாலுக்கும் விரும்பிய யாவையும் அளிக்கவல்லதும் ஆகிய திருமகளின் கடைக்கண் நோக்கம் மங்களங்களைச் செய்யட்டும்.

6. கருமேகக் கூட்டத்தைப் போன்ற திருமாலின் மார்பில், மேகத்தில் ஒளிரும் மின்னலைப் போல, விளங்குபவளும் எல்லா உலகங்களுக்கும் தாயும் ஆகிய திருமகளின் உயர்ந்த மூர்த்தி எனக்குச் சுபங்களை அளிக்கட்டும்.

7. மதுவைக் கொன்றதினால் அஞ்சிய மன்மதன் எந்தக் கடைக்கண் நோக்கத்தின் சிறப்பால் மங்கள ரூபியாகிய திருமாலையும் வென்றானோ. அப்படிப்பட்ட மென்மையாக அசையும் நாணத்தோடு கூடிய திருமகளின் பார்வை என்மேல் சிறிது விழ வேண்டும்.

8. அருளாகிய காற்ருேடு கூடிய, திருமாலின் மனைவியாகிய திருமகளின் கண்களாகிய மேகங்கள் நீண்டகாலமாய்ப் பாபக் கூட்டமாகிய கோடையால் நலியும் ஆதரவற்ற இந்தச் சாதகப் பறவைக் குஞ்சுக்குச் செல்வமாகிய மழையைப் பொழியட்டும்.

9. வழிபாட்டு முறைகளை அறியாதவர்களும், எந்த அருள் நனைந்த பார்வையால் தேவ பதவியையும் எளிதில் அடைகின்ருர்களோ தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளின் சிறந்த தாமரைமலர் போல ஒளிவீசும் அத்தகைய கடைக்கண் பார்வை எனக்கு வளங்களை அருளட்டும்.

10. சொல்லுக்குத் தலைவியாகிய நாமகளாகவும், கருடக் கொடியோனுகிய நாராயணனின் மனைவியாகவும் சிவபெருமானின் மனைவியாகிய சாகம்பரீ சக்தியாகவும், ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்னும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆடல்களில் அவதரிக்கும் மூன்று உலகங்களுக்கும் தலைவனுகிய திருமாலின் மனைவியுமாகிய திருமகளுக்கு வணக்கம்.

11. விதித்த செயல்களின் பயன்களை அளிக்கும் வேதமாகவும், இனிய பண்புக் கடலாகவும், இன்பக் கலவியாகவும், தாமரை மலரில் விளங்கும் சக்தியாகவும், வளங்களின் உறைவிடமாகவும், திருமாலின் மனைவியாகவும் விளங்கும் திருமகளுக்கு வணக்கம்.

12. தாமரை போன்ற முகமுடையவளும், பாற்கடலில் பிறந்தவளும், சந்திரன், அமுதம் இவைகளுக்கு உடன்பிறப்பானவளும், நாராயணனின் மனைவியும் ஆகிய திருமகளுக்கு வணக்கம்.

13. தாமரைக் கண்ணியே! தாயே! எல்லோராலும் வணங்கப்படுபவளே! செல்வங்களை அளித்து எல்லா இந்திரியங்களையும் மகிழ்வித்துப் பேரரசு பதவியைக் கொடுத்துத் துன்பங்களிலிருந்து விடுதலை அளிக்கும் உன் வணக்கங்கள் என்னை எப்போதும் அடைந்திருக்கட்டும்,

14. யாருடைய கடைக்கண் நோக்கத்தை சேவிப்பவருக்கு எல்லா வளங்களும் பெருகுகின்றனவோ, அத்தகைய திருமகளைச் சொல், மனம், உடல் என்னும் முக்கரணங்களாலும் வழிபடுகின்றேன்.

15. தாமரை மலரில் வீற்றிருப்பவளே! தாமரையை ஏந்திய கையினளே! வெண் நிறத்தில் பட்டு, சந்தனம், மாலை இவற்றுடன் ஒளிர்பவளே! பகவதியே! திருமால் மனைவியே! அழகியே! மூவுலகிற்கும் செல்வங்களைச் சேர்ப்பவளே! எனக்கு அருள்க!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

16. எட்டுத் திக்குகளிலும் உள்ள யானைகளால் பொற்குடங்களில் ஆகாச கங்கையின் தூய்மையான நீர் கொண்டு முழுக்காட்டப் படுபவளும், மூவுலகத் தாயும், திருமாலின் மனைவியும், பாற்கடல் மகளும் ஆகிய திருமகளைக் காலையில் வணங்குகிறேன்.

17. கமலையே! தாமரை போன்ற கண்களை யுடைய திருமாலின் மனைவியே! அருளுடன் கூடிய உனது கடைக் கண்களால் ஏழையும், கருணைக்கு வஞ்சனையற்ற பாத்திரமானவனும் ஆகிய என்னைப் பார்த்தருள்க!

18. வேதரூபம் ஆனவளும் மூவுலகத் தாயும் ஆகிய திருமகளை இந்தப் புகழ்மாலையால் நாள் தோறும் துதிக்கின்றவர்கள், உயர்ந்த பண்பு நலங் களும், மிகப் பெரும் செல்வமும், ஞானமும், கல்விச் செல்வமும் பெற்று இவ்வுலகில் வாழ்வார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அருஞ்சொற் பொருள்

I. காளீ

I 1. வாமாக்ஷி—ஈகாரம்
வது—மனைவி
குஹரம்—ஓட்டை
தாராதரம்—மேகம்

2. ப்ருந்தம்—கூட்டம்

3. வைச்வாநரன்—அக்னி
விகலித—அவிழ்ந்த
சிகுரம்—கூந்தல்
அஸிதா—கருநிறம் படைத்தவள்
ஸ்ருக்கம்—உதட்டோரம்
அஸ்ரதாரா—குருதிப் பெருக்கு

4. க்ருபாணம்—சிறியகத்தி
அபீ—அபய முத்ரை
அகஹரா—பாவத்தைப் போக்குபவள்
ரதனு—பற்களை உடையவள்

5. விது—சந்திரன், பிந்து
ரதி—ஈகாரம்
கூர்ச்சம்—ஹூங்காரம்
லஜ்ஜா—ஹ்ரீங்காரம்
டத்வயம்—ஸ்வாஹா
மஹிலா—மனைவி

6. கமலா—திருமகள்
சுப்ராம்சு—வெண்மையான கிரணங்களை
யுடைய சந்திரன்
முண்டஸ்ரக்—முண்டமாலை
அதிசயம்—மிகவும்
பீன—பருத்த

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

7. கதாஸூனும்—உயிரற்ற
ப்ரகரம்—தொகுதி
நிதம்பா—அல்குலையுடையவள்
தல்பம்—படுக்கை

8. சிவா—பெண்நரி
நிவஹம்—தொகுதி
நிகரம்—தொகுதி
ஸங்கீர்ண—சிதறிய
பரிபவம்—தோல்வி

9. தாதா—பிரம்மன்; ரோஷம்—சினம்

10. ஆபீன—மிகவும் பருத்த
ஜகனம்—அல்குல்
விவாஸா:—ஆடையற்றவனாய்
ஸித்தௌகா:—அணிமா முதலிய ஸித்தி
களின் கூட்டங்கள்

11. க்ஷோணீ—பூமி
விஹரமாணஸ்ய—இன்பமாகச் சுற்றுகின்ற

12. க்ஷிதி—பூமி
ஸ்ரீபதி—திருமால்

13. பவததிக—உன்னைத் தவிர்த்த
கீர்வாணர்—தேவர்
விரிஞ்சி—பிரம்மன்
விபுதை:—தேவர்களால்
தரித்ரீ—நிலம்
கீலாலம்—நீர்
சுசி—நெருப்பு
சமீரம்—காற்று
பவம் அனு—இந்த உலகில்
ஜனு:—பிறவி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

15. திக்படதர:—திக்கையே ஆடையாக உடையவன்; அர்க்கம்—எருக்கம்பூ பரிவ்ருட:—அரசர்

16. ஸம்மார்ஜநீ—லிங்கம்
குஜதினம்—செவ்வாய்க்கிழமை

17. ஆகீர்ண—தெளிக்கப்பட்ட;
குஸுமதனு:—மன்மதன்
கந்தர்வச்ரேணீ—கந்தவர்களது வரிசை.
நதீன:—கடல்; பர்யந்தம்—இறுதி

18. ஸ்மேரம்:—புன்னகை
உச்சை:—மிக அதிகமாக
நிரதா—ஆழ்ந்திருப்பவள்
நக்தம்—இரவில்
ஸ்மரஹர:=மன்மதனை எரித்த சிவன்.

19. லோமம்—ரோமம்; பலலம்=மாமிசம்; மார்ஜாரம்—பூனை; ஒஷ்ட்ரம்—ஒட்டகம் சாகம்—மலையாடு; ப்ரதிபதம்—ஒவ்வொரு கணத்திலும், அடிக்கடி

20. வசீ—இந்த்ரியங்களை அடக்கியவன்.
திவா—பகலில்; நக்ன:=ஆடை அற்றவன்.
நிதுவனம்—புணர்ச்சி; விநோதம்—இன்பம்

21. ஸமுத்தாரணம்—மறைவாக வெளிப்படுத்தும்
யுகளம்—இரட்டை
நிசார்த்தம்—நள்ளிரவு
ப்ரலாபம்—பொருளற்ற பேச்சு

22. குரங்கம்—மான்
காராகாரம்—சிறை
ப்ரதிஜனு—பிறப்பற்றவன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

II ஷோடசீ

1. வ்ருஷ்டி=மழை; சரோஜம்—தாமரை
2. ஸ்ப்ருஹணீயம்—விரும்புவது
அருணாப்புஜம்—செந்தாமரை; ஸோதர--போன்ற
3. ஈஷத்—சிறிது, அவிபூதா—அழுகின்றவர்கள், ப்ரணதி—வணக்கம்
4. தாவகீனம்—உன்னுடைய; கந்தலித—அரும்பிய கந்தர்பன்--மன்மதன்; தருணீ—இளம்பெண்கள்
5. க்ருணந்தீ—கூறுகின்றவர்; விஹாய:—நீங்கி. தீவ்யந்தி—விளையாடுகிறார்கள்
6. புராம்ஹந்து:=புரங்களை எரித்த சிவனுக்கு; கரலஸ்ய-நஞ்சின்; ப்லுத-மிதக்கும்,(அ)ஊறிய
7. அங்க்ரி—திருவடி; ஸ்புரத்—ஒளிரும்; ஆதபத்ரம்=குடை; வஸுதா—பூமி
8. அபிமத—விரும்பியவற்றை; வாரிதி=கடல்; அனுத=அனுதை
9. ஹந்த—அந்தோ; நிதாய—இருத்தி; நௌமி—வணங்குகிறேன்.
10. ஆலோகய—பார்; கதஞ்சித்—எப்படியாவது; நூனம்=திண்ணம்
11. ஆக்யா—பெயர்; வாரணம்=யானை
12. துரிதம்=துன்பம்; உத்தரணம்=காப்பாற்றுதல்; அனிசம்—எப்பொழுதும்
13. கல்பம்=ஊழிக்காலம்; உபஸம்ஹரணம்= ஸம்ஹாரம்; ஐக்ஷவம்=கரும்பாலான; சராஸனம்—வில்
14. பஹுல=நிறைய; குங்குமபங்கம்=குங்குமப் பூக்குழம்பு; பாஸ்வத்—ஒளிரும்; அம்ருதாம்சு= சந்திரன்; அவதம்ஸம்=தலையணி
15. ப்ரதிவாஸரம்—நாள்தோறும்; க்ஷோணிபுஜ:= அரசர்கள்; ஸ்த்தாயினீ—நிலைபெற்று.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

III தாரா

1. ப்ரத்யாலீடம்—இடது காலை முன்னும் வலது காலைப் பின்னும் வைத்து வில்லாளிகள் நிற்கும் நிலை.
புல்ல=மலர்ந்த

2. கத்யம்=உரைநடை; பத்யம்=செய்யுள்; வாராம் நிதி=கடல்; ஸிஞ்சது=தெளி.

3. பரிவீத=சுற்றிய; வ்யாதூந=அசைகின்ற க்ருத்த=வெட்டப்பட்ட; மூர்த்தஜக்ரந்தீ= மயிர்முடிச்சு

5. ஸாயுஜ்யம்=உபாஸ்ய தேவதையில் மறைந்து ஒன்று படுதல்; அப்புதி=கடல்

6 ரஜோ முத்ராங்க=துகள் இடம் பெற்ற; கோடீரிண:=மகுடங்களை உடையவர்கள் ஸங்கரம்=போர்க்களம்

7. பலாயனம்=ஓடுதல்; கசரா:=ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவர்கள்

8. ஸித்திகணம்=அணிமா, மஹிமா, லகிமா, கரிமா, ஈசித்வம், வசித்வம, ப்ராகாம்யம், பிராப்தி என்னும் எட்டு ஸித்திகள்; கஜகடா ஸ்தம்பம்=யானைகளை நிறுத்துதல்; க்ஷுத்ரா: =சிறியவன்

10. அனச்வரா=அழியாத

11. நைருஜ்யம்=நோயின்மை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

IV. புவனேசுவரீ

1. ஈடே=துதிக்கிறேன்; கிரம்=சொல்லே; விமல யாமி=தூய்மையாக்குகிறேன்.

3. சிகி=நெருப்பு; மருத்=காற்று; அம்பரம்= ஆகாயம்; ஹோதா—ஹோமம் செய்யும் எஜ மானன்; இந்து=சந்திரன்,

4. த்ரிஸ்ரோதஸ:=மூன்று உலகங்களில் பாயும் கங்கையின்; அவைமி=அறிவேன்; பராகம்= மகரந்தத்துகள்.

5. கலானும் அதிப:=பதினாறு கலைகளுக்கும் தலை வணுகிய சந்திரன்: இன:=சூரியன்; மோதன விதி:=மகிழ்விக்கும் முறை.

6. அசேஷ=எல்லாம்; கோமலா=மென்மையான வள்; த்ரயீ=வேதம், ப்ரஸூ=படைத்தவள் பதி=வழியில:

7. துராபம்=பெறுதற்கரிய; ஆஸாத்ய=அடைந்து; பாடவ=வலிமை; நி:ச்ரேணிகா=ஏணி; அதி ருஹ்ய=ஏறி:

8. கர்ப்பூரம்=பச்சைக் கற்பூரம்; ஹிமவாரி= பன்னீர்;விலோடித=கலந்த;ஸுஜாத=அழகிய:

9. மத்யபதவீ=நடுநாடியாகிய சுஷும்னை; அஹி ராஜ=பெரும்பாம்பாகிய குண்டலினீ சக்தி; வித்யுல்லதா=மின்னற்கொடி; விதலய= மலர்த்தி,

10. காத்ரம்=உடல்,

11. ஆலம்பி=தொங்குகின்ற; ஆபீவர=பருத்த; தநு=நுண்ணிய

12. அவஜித்ய=வென்று; ஆபத்ய=அடக்கி,

13. உத்தப்த=உருககிய; ஹாடகம்=பொன்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

14. தோர்வல்லரீ=தோள்களாகி கொடிகள்; த்யுதி=நிறம், விபக்ஷபக்ஷான்=பகைவர் கூட்டங்களை; ந்யக்குர்வதீ=அழிக்கின்றவள்.

15. நிதாகம்=கோடைக்காலம், சீகரம்=நீர்த்துளி; அம்சுகம்=ஆடை; அஸிதகாந்தி=கருநிறம்; புலிந்த தருணீம்—வேட்டுவக் குலத்து இளம் பெண்,

16. க்வணித=ஒலிக்கின்ற; ஊர்த்வமுகரூட=மேல் நோக்கிவளர்ந்த; நாலம்=தண்டு.

17. ஸமீக்ஷிதும்=பார்ப்பதற்கு; வ்ருஷகேதனேன= இடபக் கொடியோனாகிய சிவபெருமானால் அனுராகம்=காதல்

18. அவலேபம்=செருக்கு; ஸ்தௌல்யம்=பருமன்; ரம்பம்=வாழைத்தண்டு; ச்ரோணீ=அல்குல்

19. யுகபத்=ஒரே சமயத்தில்,

20. ஹுதாசன:=நெருப்பு; ஆபாத்ய=படைத்து. பல்வலம்=குளம்;

22. மகரத்வஜ:=மீன் கொடியோனாகிய மன்மதன்; ஸ்ம்ருதிபதம்=நினைவுத்தடம்

23. ஆயதம்=நீண்ட; ருசிர=ஒளிபடைத்த; கம்பு= சங்கு;

24. அபிஜாத=அழகிய; தரபுல்ல=சிறிது மலர்ந்த; பிம்பம்=கொவ்வைக்கனி;

25. அலிவ்ரஜம்=வண்டுக் கூட்டம்; கேசபாசம்= கூந்தல்; புராண பாசம்=வினைகளாகிய பாசம் இந்தப் பாடல் பாசம் என்ற சொல்லுக்கு உள்ள இரண்டு பொருள்களின் அடிப்படையில் பர தேவதையின் கேச பாசத்தைத் தியானிக்கிறவ னுக்குப் புராண பாசம் தானாகவே விலகுகிறது என்று சுவைபடக் கூறுகிறது.

26. ஆர்த்ர=உருகிய; க்ஷிதிபர்=அரசர்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

V சின்னமஸ்த்தா

1. சண்டரச்மி = சூரியன்; த்ரிதயதனு = இச்சை ஞானம் கிரியை என்னும் மூன்று சக்தி வடிவங்கள்,
யோகமுத்ரா = யோகத்தில் நிலைபெற்ற தன்மை அல்லது சிவசக்தி ஸாமரஸ்யத்திலிருந்து பெறப்படும் ஆனந்தம்.
2. பந்தூகம் = செம்பருத்தி; ப்ரத்யும்னன் = மன்மதன்; காமினீ = மனைவி — ரதி.
3. உன்முக்த = அவிழ்ந்த; அஸ்ருக்தாரா = குருதி வீழ்ச்சி.
4. ஆரக்த = சிவந்த; உறு = வலிமையான; அருணிம = சிவந்த
5. கனகடா = மேகக் கூட்டம்; துஷ்ப்ரேக்ஷ்ய = காண முடியாத; விவரம் = ஓட்டை; ஸத்யத் சின்ன = அப்பொழுது வெட்டிய
6. கலுஷம் = வெம்மை (அல்லது) கொடுமை
7. மும்மூர்த்திகள் சின்னமஸ்த்தா என்னும் ப்ரக்ருதியின் விக்ருதிகளாக இந்த சுலோகத்தில் கூறப்பெறுகின்றனர்.
8. பரஸ்த்ரீயோக பூஜா = இந்தச் சொல் குண்டலினீ சக்தியுடன் இணையும் த்யானத்தைக் குறிக்கும்.
பசுஜனம் = ஞானமற்றவர்களும் வெறும் இந்திரிய போகங்களிலேயே ஆழ்ந்திருப்பவர்களும் ஆகிய அறிவற்ற மக்கள்.
12. வையாக்ராஜினம் = புலித்தோல்; கர்வா = குறிய வடிவினள்; அநிர்வசனீய = இன்னதென்று கூற இயலாத; பர்வஸுபகா = அந்தந்த வகையான பேறுகளாக இருப்பவள்; குந்தருசி = வெண்மல்லிகை போன்ற நிறம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

VI திரிபுரபைரவீ

1. மாத்ருபூதா=பிறப்பிடமானவள்
2. திவாகராபா=சூரியனைப் போன்ற ஒளி படைத்தவள்
3. பூரம்=வெள்ளம்; ஆகுலமான=கலங்கிய
4. அம்புராசி=கடல்
5. அவதம்ஸம்=தலையணி;வ்யாக்யா=சின்முத்ரை
6. பரிணத்த=தழுவிய; வாக்=சரஸ்வதி
7. பராதீன்=பரா பச்யந்தீ மத்யமா வைகரீ என்னும் சொல்லின் நான்கு நிலைகளை; கரணம்=உறுப்பு.
8. ஆகுஞ்ச்ய=சுருக்கி; தருணார்க்கமித்ரம்=இளம் சூரியனைப் போன்ற
9. மன்மதரிபு=சிவன்; அத்ரிதனயா=மலைமகள்.
10. பாதபம்=மரம்; கனகாசலம்=மேருமலை
11. சிவராஜதானி=பரசிவம் இருக்கும் பிரம்ம ரந்த்ரம்.
12. வஸதி=இருப்பிடம்
13. அர்க்கதநு=சூரியரூபத்தில்
14. தாரிணீ=தோணி; கேதம்=துன்பம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

VII தூமாவதீ

1. கலிகா—மொட்டு

2. கட்வாங்கம் = குண்டாந்தடி; கட்டில் கால் போன்ற ஆயுதம்; கபாலம் செருகிய தடி என்றும் பொருளுண்டு. (ஸௌபாக்ய பாஸ்கரம் பார்க்க) தார்க்ஷ்யன் = கருடன்; காலராத்ர்யாம் ஊழிக்கால இரவில்; நள்ளிரவிற்கு மஹாராத்ரி என்றும் அக்ஞானத்தில் மூழ்கியுள்ள நிலைக்கு மோஹராத்ரி என்றும் ஊழிக்கால இரவிற்குக் காலராத்ரி என்றும் பெயர். "காலராத்ரிர் மஹாராத்ரிர் மோஹராத்ரிச்ச தாருணா (சண்டி சப்தசதீ) நோக்குக.

3. அஸ்திகண்டம் = எலும்புத்துண்டு
பாயாத் = காப்பாற்றட்டும்

4. ஸங்கட்ட = செறிந்த; ஹால = நஞ்சு

5. ம்ருகாங்க = சந்திரன்; விகட = விரிந்த; ஸ்கந்தம் = தோள்; கங்காலம் = எலும்புக்கூடு.

6. த்ரபு = ஈயம்; கர்ணிகா = காதுவளையம்; ராஸபேன = கழுதையால்; வர்ஷிணீ = வயதானவள்

7. ஸங்க்ராமம் = போர்க்களம்; ஹேதி = ஆயுதம்; க்ருத்த = வெட்டப்பட்ட; தசனை: = பற்களால்; ப்ருதுதர = மிகப் பெரிய; வ்யக்ர = தயார் நிலையிலுள்ள

8. வசா = நிணம்; சண்டகண்டா = உரத்த ஒலி எழுப்பும் மணியைத் தாங்கியவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

VIII பகளாமுகீ

1. வேதீ=மேடை; முத்கரம்=கதை;
2. அபிகாதம்=அடித்தல்
3. கண்டம்=கன்னம்; விபக்ஷம்=எதிரிகள்,
4. பீயூஷம்=அமுதம்; அரி=பகைவன்; ரஸஞ= நாக்கு,
5. நிதாய=ஏந்தி; பார்த்திவம்=ஸ்திரமாயா என்னும் பகளாமுகீ பீஜம், அமித்ரன்=பகைவன்,
6. மூகதி=ஊமையாகிறுன்; ரங்கதி=ஏழையாகிறுன்; வைச்வானர:=நெருப்பு; கஞ்சதி= நொண்டுகிறுன்; கர்வதி=சுருங்குகிறுன், யந்த்ரஞ்யந்த்ரித:=ஸ்தம்பன சக்தியால் கட்டப்பட்டவன்.
7. தலனம்=அழித்தல்; ஸம்ஸதி=அவைக்களத்தில்,
8. நிகேதனம்=இருப்பிடம்.
9. பஞ்ஜய=அழிப்பாயாக; கீலய=ஆணியால் அறை; திஷணம=அறிவை
10. த்ராஹி=காப்பாற்று
11. ஸம்ரம்பம்=பெருங்குழப்பம்; ப்ரஹரணம்= போர்; ஆசு=விரைவில்
12. ம்ருகேந்த்ராதி=சிங்கம் புலி முதலியவை
13. யோஷா=பெண்கள்
16. சிலா முத்கரம்=கருங்கல்லால் ஆன கதை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

IX மாதங்கி

1. ஆபு:=அடைந்தனர்
2. ஆம்நாயம்=சாக்தாகமங்களில் மந்திரத் தொகுதிகளாக உள்ள ஆறு பிரிவுகள். இவை பூர்வம்; தக்ஷிணம், பச்சிமம், உத்தரம், ஊர்த்வம், அனுத்தரம் என ஆறுவகைப்படும். இவை பொதுவாக ஷடாம்ஞயம் எனக் கூறப் படும். ஐந்து ஆம்நாயங்கள் எனத் தொகுத்துக் கூறுங்கால் ஊர்த்தவம் அநுததரம் என்னும் இரண்டும் ஒன்ருகக் கருதப்படும். இந்தக் கருத்தில் பரசுராம கல்ப சூத்திரத்தில் 'பஞ்சாம் நாயான் ப்ரணிநாய'' எனக் கூறப்படுவது காண்க. ஆயினும் ஆறு என்பதே பெருவழக்கு "ரஸாம்ஞய மஹஸ:'' (ஸௌந்தர்யலஹரீ) என்பது இதனை வலியுறுத்தும் (ரஸம்=ஆறு ரஸங்கள்)
3. மஹீபதீனும்=அரசர்களது
4. வல்லகீ=வீணை; அம்சுகம= ஆடை திர்ப்பேமி=தர்ப்பணம் செய்கிறேன்; த்ருப்தி செய்விக்கிறேன் என்பது பொருள்.
5. தாலீதளம்=பனையோலை; கூர்ணித=சுழலும்
6. லோமராஜீ=மயிரொழுக்கு; நாபியிலிருந்து மேல் நோக்கிச் செல்லும் மெல்லிய பூனை மயிர் வரிசை.
7. கபோலம்=கன்னம்
8. லலாம=கஸ்தூரி; ஆலால=அசைந்தாடும் அலகம்=கூந்தல்.
10. மரீசி=கிரணம்; வீசி=அலை ஸங்கதி=மது; கந்தம்=மூலாதாரம்; ஆபீன=பருத்த; துங்க=மேல் நோக்கி உயர்ந்த

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

X கமலாத்மிகா

1. ப்ருங்காங்கனு—பெண்வண்டு;
அபாங்கம்—கடைக்கண்
2. த்ரபா—வெட்கம்; மதுகரீ—பெண்வண்டு;
திசது=கொடுக்கட்டும்
3. ஈஷத்—சிறிது; நிஷீதது—தங்கட்டும்
4. ஆகேகர—பாதிமூடிய; கனீநிகம்—கருவிழி
5. ஹரிநீலம்—இந்திரநீலக்கல்
6. காலாம்புதம்—கருமேகம்; ஆலி—வரிசை;
தாராதரம்—மேகம் தடித்—மின்னல்
7. மதுமாதி—மது என்ற அரக்கனை அழித்த திருமால்
8. பவனம்—காற்று; விஹங்கசிசு—பறவைக்குஞ்சு
விஷண்ண—துன்புற்ற; கர்மம்—வெம்மை
9. த்ரிவிஷ்டபம்—தேவலோகம்;
புஷ்கரம—தாமரை; விஷ்டரம—ஆசனம்
10. கீர்தேவதா—நாமகள்
11. சதபத்ரம்—தாமரை; நிகேதனம்—இருப்பிடம்
12. துக்தோததி—பாற்கடல்;
சோமன்—சந்திரன்; நாலீகம்—தாமரை
13. துரிதம்—துன்பம்; மான்யே—சிறப்பிக்கப் படுபவளே
14. தனோதி—வளர்க்கிறது;
வசனாங்கமானசை:—வாக்கு, காயம், மனம் என்னும் மூன்று கரணங்களாலும்
15. சரசிஜம்—தாமரை; தவளம்—வெண்மையான
16. அவஸ்ருஷ்ட—பாய்ச்சிய
17. கமலாக்ஷன்—திருமால்; கருணாபூரம்—கருணை வெள்ளம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஒருபத்துத் தேவியர் இருபத்துப் பாமாலை

காப்பு

காளி முதலாய்க் கமலான் மிகை ஈருய்
ஆளும் அணங்கினரை அன்புடனே—நாளும்யான்
ஏத்திப் பனுவல் இயற்றிடவே வேழமுகன்
காத்தருளும் உள்ளம் கனிந்து

நூல்

காளி

கார்பூத்த மேனியளே! காளியே! வாளேந்திச்
சீர்பூத்த செங்கரத்தாய்! சென்னிநிரைத்-தார்பூத்த
கொங்கைக் குவட்டுக் குமரியே! நின் திருத்தாள்
அங்கைப் பிடித்தேன் அமைந்து. (1)

மைந்தும் குமைந்திட மன்னிடுகாட்டிடை
மன்னவன்மார்(பு)
உந்தும் திருவடி உட்கேற்றும் சென்னி ஒலியலுடன்
பந்தம் கழற்றும் சவாதனம் ஏறிப் படைக்கலங்கள்
நந்தும் திருக்கரம் நான்குடை யாய் எங்கள் நாயகியே

தாரா

நாயகியோ நாய்சிவைதாம் நண்ணும் சுடலைக்கண்
ஏயபரை யாயிலங்கும் ஏகசடைத்—தாயனைய
தாரையாள் சேவடியைத் தாழ்ந்தார் நிமிர்ந்திடுவார்
பாரையாள் பாங்குறுவார் பார். (3)

பாரங் குறைந்து பயன்பெறப் பன்மொழிப்
பண்டிதனாய்
ஈரங்கசியுங் கவிசொலச் செல்வங்கள் ஏறிடவே
சாரம் பெருகுக்ர தாரையாள்நீல சுரசுதிதாள்
வாரம் பொதுளமலர்கொண்டுவாயாரவாழ்த்துமினே!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஷோடசீ

வாழையடி வாழையென மாட்சி அருளிப்பின்
தோழமையாய் உள்ளே துணையிருப்பாள்—சூழவரும்
ஆவரண மானபதி னாறெழுத்தாள் அம்பிகையாள்
தேவரண வுந்திருவும் சேர்த்து. (5)

சேர்த்தேன் திருவடி சென்னியன்
னுயென்று தேம்பியழு
தார்த்தேன் அகத்தினுள்
ஆழ்ந்தேன் சிவயோக அம்புதிக்கண்
வேர்த்தேன் வினைக்கு விடைகொடுத்
தெல்லாம் வியப்புடனே
பார்த்தேன் பராபரை சோடசி
கட்கடைப் பாங்கிதுவே! (6)

புவனேசீ

பாங்கியர்தாம் சூழப் பரிதியொளி வீசிமதி
ஓங்குமுடி வெற்பின் உயர்முலையாள்-ஆங்கொருகண்
நெற்றியாள் அன்னைபுவ னேசிகரம் நான்குடைய
பெற்றியாள் மாண்புநெஞ்சே பேசு. (7)

பேசிப் பிதற்றிப் பெருவாழ் வவமாக்கும்
பேதையர்காள்!
வாசப் புதுமலர் வாரிப் புவனை மலரடிக்கே
வீசிப் புகழ்சொலி வித்தகி நாமம் விளம்பிடுவார்
பூசிக்கும் பேறு பொதுளுவர் மாநிதி பொங்கிடவே!

சின்னமஸ்தா

பொங்குதிரம் முப்புனலாய்ப் பூரிப்ப ஓர்கரத்தில்
தங்குசிரம் ஆரஇரு சத்தியரும்—பங்குபெறக்
காமரதி கீழ்மேற் கலவிபிர சண்டசண்டி
சேமமுறு பீடமெனத் தேர். (9)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தேராக மேனிச் சிறப்பேற்றி
யோகத் தெளிவுபெற்றுக்
கூரான புந்தியிற் குண்டலி
ஆணையிற் கூட்டுவிக்க
வேராய் விளையும் வியன்ஞான
மின்னலில் வீற்றிருத்தல்
பாராய் மனமேநம் சின்ன
சிரத்தாள் பராபரையே! (10

திரிபுரபைரவி

பராபரமாய் முக்கூடப் பண்பாய் மிளிர்ந்து
தராதலமே காக்கின்ற தாயாம்—விராவு
திரிபுரமார் வைரவிதாள் சிந்திப்பார்க் குள்ளத்
திரிபுரமே நீங்கும் தெளி. (11)

தெளிக்கும் கவிநயம் செல்வச்
செழிப்புடன் தேயமெல்லாம்
களிக்கும் படிக்குக் கருணைசால்
நெஞ்சமும் கல்வியுடன்
அளிக்கும் திரிபுர வைரவி
பாதத் தமுதினிலே
குளிக்கும் பெரும்பேறு கொண்டவர்
மன்னர் குவலயத்தே! (12)

தூமாவதி

குவலயமே ஆழ்ந்து குழையுமுறக் கத்தின்
நவலயமாய் நிற்கின்ற நாதை—சிவலயமாம்
தூமா வதியின் துணைத்தாள் வழுத்துநர்க்குப்
பூமா நிலையொளிரும் பூத்து (13)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பூத்துக் குலுங்கும் புதுமணச்
சோலையும் பொன்மணிகள்
யாத்துத் தொடுத்த எழில்மாலை
என்ன இரண்டியலாய்க்
கோத்துக் கிடக்கும் புவியி
னடிப்புறம் கூர்புகைத்தீக்
கூத்துக்கண் காண்பவர்
தூமா வதியைக் குறித்தவரே! (14)

பகளாமுகி

குறியவுளம் கொண்டதெவ்வர் கூரியநாப் பற்றி
எறிகதையால் சென்னிமிசை எற்றி—நெறியலரைப்
பந்திக்கும் அன்னை பகலா முகிபதமே
சிந்திக்கும் பேறேநம் சீர். (15)

சீரை மலர்த்தொடை சீரணி யாவும் திகழ்மஞ்சளாய்ப்
பாரை நிறுத்தும் பகலை பிரம படைக்கலமாம்
பேரை அமைத்தநன் மந்திரம் பேசுநர் பேர்வழுத்து
வாரை யுலகும் வணங்கி யொதுங்கி வழிவிடுமே! (16)

மாதங்கி

வழியும் மதுவின் மணமிகுந்த மத்தம்
செழியும் வனப்புற்ற செம்மை—விழியகலா
மாதங்கி தேவி மலர்ப்பதங்கள் சேவிப்பார்
கேதங்கள் போகுமன்றே கேள். (17)

கேள்விக் குறியான வாழ்க்கை
பொலிவுறும் கேண்மையுடன்
வேள்விக் குரியசின் மாமலர்ப்
பெய்தன்னை வீறுபெற்றுத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தாள்வித் தகமே தழைந்திட
மாதங்கித் தாய்நம்மையும்
தோள்வைத் துயர்த்துவள்
துன்பமுண் டோ இந்தத் தொல்லுலகே! (18)

கமலாத்மிகா

தொல்லையெலாம் நீங்கிச் சுகங்கள் பெருகிடவும்
ஒல்லையினில் செல்வம் உயர்ந்திடவும்--அல்லைநிகர்
மாயன் மயங்குமணி மாமகள்பூந் தாளிணைக்கண்
நீயன்பு செய்திருத்து நெஞ்சு. (19)

நெஞ்சத்திலின்பம் நிறைத்திட வாரணம்நீள்கரத்தால்
பஞ்சஞ்சு சீரடிப் பால்முழுக் காட்டிடப் பார்முழுதும்
அஞ்சற் கரத்துடன் ஆர்ப்பின்றி மின்னி
அழகுருவாய்க்
கஞ்சத் தவிசிற் கமலான் மிகையருட் கார்பூத்ததே!

நூற்பயன்

பத்துச் சத்தியர் பதமலர் பத்தியாய்ப் பரவும்
வித்தைப் பாநிறை மாலையைப் படித்துளம் வியப்பார்
புத்தித் திண்மையும் பொருள்பொதி வாழ்க்கையும்
பொதுளச்
சித்திக் கூட்டமும் சேர்குவர் ஞானமும் சிறந்தே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆசிரியரின் பிறநூல்கள்

தமிழ்

1. சிதானந்த விஜயம்
2. யோகானந்த நாதர் நினைவு மலர்
3. பூர்ணானந்த விலாசம்
4. கணபதி ஸஹஸ்ர நாமம் (விரிவுரை)
5. அன்னையும் ஆசானும் (கவிதை)
6. வில்லும் அம்பும் (கவிதை)
7. மண்டல மாலை (கவிதை)

ஆங்கிலம்

1.	அபிராமி அந்தாதி	மொழிபெயர்ப்பு
2.	அபிராமி அம்மை பதிகங்கள்	,,
3.	சகலகலாவல்லி மாலை	,,
4.	கந்தர் கலிவெண்பா	,,
5.	நமச்சிவாய மாலை	,,
6.	ஆளுடைய மாலை	,,
7.	விநாயகர் அகவல்	,,
8.	திருவருட்பா (சில்பாக்கள்)	,,
9.	பஜகோவிந்தம்	,,
10.	A Manual on Saktam	English

இனி வருவன

1. சாக்த தரிசனம் (தமிழ்)
2. சேய்த்தமிழ் (தமிழ்)
3. Parasurama Kalpasutram (English Commentary with notes)
4. Bhaskararaya. His Works & Philosophy (English)
5. Ratnatraya Samiksha (Sanskrit)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ குஹானந்த மண்டலியின் வெளியீடுகள் :

1. மநீஷா பஞ்சகம்
2. ஸ்ரீவித்யா கீதை
3. அஹங்க்ரஹோபாஸநா விமர்சம்
4. மஹாஷோடசி மந்த்ரார்த்தம்
5. த்ரைபுர ஸித்தாந்தம்
6. சிஷ்யானுசாஸனம்
7. பூரண விமர்சம்-1
8. பூரண போதம்
9. பூரண முத்துக்கள்
10. மந்த்ரார்த்தங்கள்
11. ஸ்ரீ கணபதி ஸஹஸ்ரநாமம்-உரை
12. ஸ்ரீ சிதானந்த விஜயம்
13. ஸ்ரீ பூர்ணானந்த விலாஸம்
14. ஸ்ரீ யோகானந்தநாதர் நினைவு மலர்
15. அன்னையும் ஆசானும்
16. வில்லும் அம்பும்
17. மண்டல மாலை
18. A Manual on Saktam

கிடைக்குமிடம் :

நாராயண பாரதி
(உரிமையாளர்)
125, கல்லூரிச் சாலை, நங்கை நல்லூர்,
பழவந்தாங்கல் - அஞ்சல், சென்னை-600 114

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



பூஜ்யஸ்ரீ யோகானந்தநாதர் அவர்கள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,